உ

சிவமயம்,

திருவெண்காடரென்னும்

இயற்பெயரினையுடைய

பட்டணத்துப்பிள்ளையார்

1142

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டு.

இதனுள்

அகவல், கலித்துறை, வெண்பா,

இம்மூன்றும், அடங்கியிருக்கின்றன,

இஃது,

காரைக்கால்,

கிருஷ்ணமூர்த்தி முதலியாரால்

ஷையூர்

" மநோரஞ்சித விலாச அச்சுயந்திரசாலையிற் "

பதிப்பிக்கப்பட்டது.

1892

THANJAVUR MAHARAJA SERFOJI'S

உ

கணபதிதுணை.

பட்டணத்துப்பிள்ளையார்.

திருப்பாடற்றிரட்டு.

கோயிற்றிருவகவல்.

நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமினமனனே நினைமின்மனனே
அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்பொய்வாழ்க்கையை யுடலையோம்பற்க
பிறந்தனவிவச்கு பிறந்தனமிறக்கும்
தோன்றினமறையு மறைந்தனதோன்றும்
பெருந்தனசிறுக்கும் சிறுந்தனபெருக்கும்
உணர்ந்தனமறக்கு மறந்தனவுணரும்
புணர்ந்தனபிரியும் பிரிந்தனபுணரும்
அருந்தினமலமாம் புனைந்தனவழுக்காம்
உவப்பனவெறுப்பாம் வெறுப்பனவுவப்பாம்
என்றிவையனைத்து முணர்ந்தனையன்றியும்
பிறந்தனபிறந்தன பிறவிகடோறும்
கொன்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன
தின்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன.
பெற்றனையனைத்து மனைத்துநினைப்பெற்றன.

ஓம்பினையனைத்து மனைத்துநினையோம்பின்
செலவத்துக்களித்தனை தரித்திரத்தழுங்கினை
சுவர்க்கத்திருந்தனை நரகிற்கிடந்தனை
இன்பமுந்துன்பமு மிருநிலத்தருந்தினை
ஒன்றென்றொழியா துற்றனையன்றியும்
புற்புதக்குரம்பைத் துச்சிலொதுக்கிடம்
என்னநின்றியங்கு மிருவினைக்கூட்டைக்
கல்லினும்வலிதாக் கருதினையிதனுள்
பூளையும்நீறும் புறப்படுமொருபொறி
மீளுங்குறும்பி வெளிப்படுமொருபொறி
சளியுநீறுந் தவழுமொருபொறி
உமிழ்நீர்கோழை யொழுகுமொருபொறி
வளியுமலமும் வழங்குமொருபொறி
சலமுஞ்சீழுஞ் சரியுமொருவழி
உள்ளுறத்தொடங்கி வெளிப்படநாறும்
சட்டகமுடிவிற் சுட்டெலும்பாகும்
உடலுறுவாழ்க்கை யுள்ளுறத்தோர்ந்து
கடிமலர்க்கொன்றைச் சடைமுடிக்கடவுளை
ஒழிவருஞ்சிவபெரும் போகவின்பத்தை
நிழலெனக்கடவா நீர்மையொடுபொருந்தி
எனதறநினைவற விருவினைமலமற
வரவொடுசெலவற மருளறவிருளற
இரவொடுபகலற விகபரமறவொரு
முதல்வனைத்தில்லையின் முளைத்தெழுஞ்சோதியை

அம்பலத்தரசனை யானந்தக்கூத்தனை
நெருப்பினிலறக்கென நெக்குநெக்குருகித்
திருச்சிற்றம்பலத் தொளிருஞ்சிவனை
நினைமின்மனனே நினைமின்மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின்மனனே நினைமின்மனனே.

(இரண்டாவது கோயிற்றிருவகவல்.)

காதலவேசடிய கலகப்பாதகக்
கன்னியர்மருங்கிற் புண்ணுடனுடுங்
காதலுங்கருத்து மல்லாநின்னிருதாட்
பங்கயஞ்சூடப் பாக்கியஞ்செய்யாச்
சங்கடங்கூர்ந்த தமியேன்பாங்கிருந்
தங்கோடிங்கோ டலமருங்கள்வர்
ஐவர்கலகமிட் டலைக்குங்கானகம்
சலமலப்பேழை யிருவினைப்பெட்டகம்
வாதபித்தங்கோழை குடிபுகுஞ்சிறூர்
ஊத்தைப்புன்றோ லுதிரக்கட்டளை
நாற்றப்பாண்ட நான்முழத்தொன்பது
பீற்றற்றுண்டம் பேச்சுரைத்தோட்டம்
அடலைப்பெரிய சுடலைத்திட்ருள்
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரம்
ஓயாநோய்க்கிட வோடுமரக்கலம்
மவிசோகார மரணப்பஞ்சரம்
சேறுறத்துருத்தி தூற்றும்பத்தம்
காற்றிற்பறக்குங் காணப்பட்டம்

விதிதழித்தருமன் வெட்டுங்கட்டை 1
சதுர்முகப்பாணன் றைக்குஞ்சட்டை
சமக்கனலி விடுசிலவிருந்து
காமக்கனலிற் கருகுஞ்சருகு
கிருமிகிண்டுங் கிழங்கஞ்சருகு
பவக்கொழுந்தேறுங் கவைகொழுகொம்பு
மண்மாய்கட்கும் வடிவின்முசிவிற்
பிணமாய்க்கிடக்கும் பிண்டம்பிணமே
ஊறிற்கிடக்க வொட்டாவுபாதி
காலெதிற்குவித்த பூளைகாளைக்
கதிரெதிர்பட்ட கடும்பனிக்கூட்டம்
அந்தரத்தியங்கு மிந்திரசாபம்
அதிரமேகத் துருவினருநிழல்
நீநிற்குமிழி நீர்மேலெழுத்து
கண்டுயில்கனவிற் கண்டகாட்சி
அதனினும்பொல்லா மாயக்களங்கம்
அமையுமமையும் பிரானேயமையும்
இமையவள்ளி வாழியென்றேத்த
ஆனந்தத்துத் தாண்டவங்காட்டி
ஆண்டுகொண்டருள்கைநின் னருளினுக்கழகு.

(மூன்றாவது கோயிற்றிருவகவல்.)

பாற்கடல்கடையப் படுங்கடுவெண்ணெயைத்
திருமிடற்றடக்கிய படுங்கடுவெண்ணெயைத்
திருமிடற்றடக்கிய சிவனேயடைக்கல

அடங்கலுமடங்கிடுங் கடுங்கொலைக்காலனை
மாளவுதைத்தடங்கிய கடவுளின்னடைக்கலம்
உலகடங்கலும்படைத் துடையவன்றலைபறித்
திடக்கயிலடக்கிய விறைவனின்னடைக்கலம்
செய்யபொன்னம்பலச் செல்வனின்னடைக்கலம்
ஐயநின்னடைக்கல மடியநின்னடைக்கலம்
மனவழியலைந்திடுங் கனவெனும்வாழ்க்கையும்
விழுப்பொருளறியா வழக்குறுமனனும
ஆணவமலத்துதித் தனைந்ததிலுளைந்திடும்
நினைவைப்புழுவென நெளித்திடுசிந்தையும்
படிறும்பாவமும் பழிப்புறுநினைப்பும்
தவறுமழுக்காறு மிவருபொய்ச்சாப்பும்
கவடும்பொய்யுஞ் சுவடும்பெருஞ்சின
விகலுங்கொலையு மிழிப்புறுபுன்மையும்
பகையுமச்சமுந் துணிவுமபெருஞ்சின
விகலுங்கொலையு மிழிப்புறுபுன்மையும்
பகையுமச்சமுந் துணிவும்பனிப்பும்
முக்குணமடமையு மைப்பொறிமயக்கமும்
இடும்பையும்பிணியு விடுக்கியவாக்கையை
உயிரெனுங்குருவு விட்டோடுங்குரம்பையை
எலும்பொநெரம்பு கொண்டிடையிற்பிணைத்துக்
கொழுந்தசைமேய்ந்து மொழுக்குவிழுங்குடிலைச்
செழும்பெழுவுதிரச் சிறுபுழுக்குரம்பையும
மலவுடற்குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
கொல்விலாச்சோற்றுத் துன்பக்குழியைக்